**போரதீவுப்பற்று பிரதேச சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஜுன் 03 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 27 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 19 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து போரதீவுப்பற்று பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்.

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

நிதிக்கூற்றுக்களுடன் காசுப் பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 2 இன் பிரகாரம் முறையாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்த வேண்டிய ரூபா.16,000 தொகையான கணக்காய்வு கட்டணம் கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1990 ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்த சூழ்நிலையின் காரணமாக அழிக்கப்பட்ட ரூபா.2,100,000 பெறுமதியான தளபாடங்களையும், 2011 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் அழிக்கப்பட்ட ரூபா.192,001 பெறுமதியான நூல் நிலையப் புத்தகங்களையும் ஏடுகளில் பதிவழிக்கப்படாதனால் நிதிக்கூற்றுக்களில் சொத்துக்களின் பெறுமதி அத்தொகைகளால் அதிகரித்துக் கணக்கிடப்பட்டுள்ளது.

(இ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்த வேண்டி இருந்த மின்சாரக் கட்டடணம் ரூபா.30,396 தொகைக்கு கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிலையான வைப்பு தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா.51,584 தொகையான வட்டி வருமானம் கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஐந்து ஒப்பந்தகாரர்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய பிடிகாசு ரூபா.34,666 தொகை கொடுத்து தீர்க்கப்படாது 2009 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் கொண்டுவரப்படுகின்றது.

(ஆ) சபையில் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற 07 உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா.504,000 கூட்டு மொத்தத் தொகை ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்பட்ட போதிலும் அவற்றை அறவிட நடவடிக்கை எடுக்கப்படாமல் தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றன.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள் மற்றும் விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிதி நிருவாக விதிகள் | |
| (i) அத்தியாயம் I இன் பிரிவு 5(XII) | காசு, களஞ்சியப் பொருட்கள் முதலியவற்றுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்களிடம் இருந்து போதுமான பிணைகள் பெற்றுக்கொள்ளல் தவிசாளரின் கடமை எனினும் பிணைப் பணம் பெற்றிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் III இன் பிரிவு 81 | காணி உரிமைமாற்றல் சம்மந்தமான முத்திரைத் தீர்வைகளை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் பதிவாளர் நாயகத்திற்கும் ஏனைய கொடுக்கல் வாங்கல் சம்மந்தமான தீர்வைகளை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் கிழக்கு மாகாணத் திறைசேரியின் பணிப்பாளருக்கும் தண்டப்பணங்களை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் நீதிமன்றங்களின் பதிவாளருக்கும் ஓவ்வொரு காலாண்டு இறுதியிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) அத்தியாயம் X இன் பிரிவு 193 | ஆண்டு முடிவடைந்த பின்னர் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவு திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான காரணங்களை விளக்கத்துடன் உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2014 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானத்திலும் கூடிய மீண்டுவரும் செலவினம் ரூபா.1,013,784 ஆக இருந்ததுடன் எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானமாக ரூபா.3,274,374 ஆக இருந்தமை மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா.4,288,158 வீழ்ச்சியைக் காட்டுகின்றது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

**(அ) தொலைத் தொடர்பு கோபுரங்களுக்கான கட்டண அறவீடு**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவிற்கு அமைய சபையினால் வருமானங்களை அறவிடுவதற்காக உபவிதிகளை சட்டமாக்கத் தவறியதன் காரணமாக சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் தனியார் தொலைத் தொடர்பு நிறுவனங்களால் நிறுவப்பட்ட 02 தொலைத் தொடர்பு கோபுரங்களுக்கு நிறுவுதல் கட்டணம் மற்றும் வருடாந்த உரிமம் என்பன தொடர்பாக பெறக்கூடிய அண்ணளவாக ரூபா.59,000 வருமானத்தை இழந்துள்ளது.

**(ஆ) வீதவரிகள்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134, 158 மற்றும் 159 ஆம் பிரிவுகளுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது 2014 ஆம் ஆண்டிற்கான காலப்பகுதியில் வீதவரிகள் கணிப்பீடு செய்யப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) முத்திரைக் கட்டணம்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய முத்திரைக் கட்டணத் தொகையினை கணிப்பீடு செய்து பதிவாளர் நாயகத்திடமிருந்து அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) அரசிறை வருமானம்**

மீளாய்வாண்டின் இறுதியில் 02 தொடக்கம் 11 ஆண்டுகள் வரை நிலுவையாக உள்ள ரூபா.65,703 தொகையான அரசிறை வருமானங்களை அறவிடுவதற்கு 2015 யூலை 23 ஆந் திகதி வரை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3 முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான முகாமைத்துவம்

(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு